2003 ஏப்ரல் 25]

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Typewriting, Short hand அதாவது தட்டச்சு, சுருக்கெழுத்து பயிலக்கூடிய மாணவர்கள், நகரம், கிராமம், குக்கிராமம் உட்பட, பயிற்சி நிலையங்களில் படிக்கிறார்கள். தேர்வு நடத்தும்போது அரசு ஒரு பொதுத் தேர்வு நடத்தி சான்றிதழ்கள் வழங்குகிறார்கள். இதன்மூலம் ஒரு ஏற்றத்தாழ்வற்ற நிலைமை மாணவர்களிடத்திலே நிலவுகிறது. கணினி பயிலக்கூடிய மாணவர்களுக்கும் அதேபோன்றதொரு தேர்வை நடத்துவதற்கு இந்தத் துறை அரசுத் தேர்வாணையத்திற்குப் பரிந்துரை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 325, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

325—

நீதிமன்றம்

***13127—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரத்தில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.